

செங்குந்தரும்

# கொடிச்சீலை கொடுக்கும் வரலாறு

04.09.2013

# செங்குந்தரும் கொடிச்சீலையும்

கொடிச்சீலை என்ற பதம் தத்துவார்த்தம் மிக்க ஒரு சொற்பிரயோகமாக மிளிர்கின்றது. கொடிச்சீலை என்று பார்க்கும் போது அதனுடன் கொடிமரம் கொடிச்சீலையோடு கூடிய தற்பைக்கயிறு என்பனவும் தொடர்புபடுகின்றன. கொடிமரம் என்பது சைவசித்தாந்தக் கருத்துப்படி பதி எனக் குறிப்பிடுகின்றது. பதி என்பது இறைவன் பரமான்மா எனவும் சிவபெருமான் எனவும் வழங்கப்படுகின்றது. கொடிச்சீலை என்பது பசு, ஆன்மா அதாவது உயிர் எனப்பொருள்படுகின்றது. கொடிச்சீலையோடு கூடிய தற்பை கயிறு பாசம் எனப்படுகிறது. இது ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது. பசுவாகிய ஆன்மா பதியாகிய இறைவனை அடைந்து பேரின்பப் பெருவாழ்வாகிய முத்தியைப் பெறவிடாது தடுத்து நிற்பது பாசமேயாம். பசுவாகிய கொடிச்சீலை பதியாகிய இறைவனைச் சேர முயலும் போது பாசம் தடுத்து நிற்பதையே கொடியேற்ற உற்சவம் வெளிப்படுத்து கின்றது.

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில் களையும் வெளிப்படுத்துகின்ற மகோற்சவம் நிறைவு பெற்றதும் கொடியிறக்கப்படு கின்றது. இறக்கப்பட்ட கொடியில் இருக்கின்ற தற்பைக்கயிறு விலக்கப்பட்டு கொடிச்சீலையாகிய ஆன்மா இறைவனது பாதார விந்தங்களில் வைக்கப்பட்டு அது நிறைவு பெறுகின்றது. இத்தத்துவம் ஆன்மாவானது பாசங்களில் நின்றும் விலகி இறைவனை அடைதலையே விளக்குகின்றது.

தமிழ் மக்கள் வாழுகின்ற பரந்த பிரதேசங்களில் ஆலயங்களுக்கு கொடிச் சீலையை வழங்குகின்ற பணியைத் தொன்றுதொட்டு செய்து வருகின்றவர்கள் செங்குந்தர் எனக் கூறினால் அது மிகையாகாது. நல்லூர் இராசதானியில் அமைந்துள்ள நல்லூர்க் கந்தன் ஆலயத்திலிருந்து பருத்தித்துறை முனை வரை இருக்கின்ற புகழ்பூத்த ஆலயங்களான சட்டநாதர் சிவன்கோவில், வல்லிபுரக் கோயில், பருத்தித்துறை சிவன் கோயில் போன்ற இன்னோர் அன்னபல ஆலயங்களுக்கு ஆங்காங்கே வாழுகின்ற செங்குந்த மரபினரே இப்பணியினை தொன்று தொட்டு மேற்கொண்டு வருகின்றனர்.

முருகப் பெருமானின் உற்றதுணையாக சிவபெருமானால் அனுப்பப்பட்ட வீரபாகு தேவரின் வழித்தோன்றல்களும் தலைவெட்ட வெட்டப் பாடிப் புகழ் பெற்றவர்கள் வாழ்ந்த காலத்தில் தலைஓட்ட ஓட்டப்பாடிப் புகழ்பூத்த ஒட்டக்கூத்தர் பரம்பரையினருமாகிய செங்குந்தர்களே இன்று வரை இப்பணியினை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

எமது நாட்டில் மட்டுமல்ல தமிழகத்திலும் கூட புகழ்பூத்த ஆலயங்களாக மிளிர்கின்ற சிதம்பரம். தஞ்சை பெருவுடையார் கோயில் போன்றவற்றிற்கும் எம்மவர்களே கொடிச்சீலை வழங்கி வருகின்றனர். இது மட்டும் அல்லாமல் கந்தசஷ்டி விரதத்தை ஒட்டி நடைபெறுகின்ற சூரன் போரிலும் கூட வீரபாகு தேவர் முதலிய நவவீரர்கள் முருகப்பெருமானுக்கு துணையாக வந்து முன்னொருகால் நடைபெற்ற அந்த நிகழ்வினை இன்று வரை நினைவு கூறுவது சாலச் சிறந்ததொன்றாக விளங்குகின்றதல்லவா. இதனை நம்மவர்கள் மறக்காதிருக்க காலத்துக்குக் காலம் நினைவு கூர்ந்து எம்மவர்களின் பெயரையும் புகழையும் பணிகளையும் பாதுகாக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை யாகும்.

# நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு கைக்கோளர் அல்லது செங்குந்தர் கொடிச்சீலை கொடுக்க வந்த வரலாறு

சிவபெருமான் திருநடனமியற்றிய இடம் தில்லை சிதம்பரம். இந்த இடத்தைத் தட்சன கைலாயம் என்றும் கூறுவார்கள். இந்தத் தில்லைச் சிதம்பரத்தில் நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யும் பாக்கியம் சந்தானகுரவரில் ஒருவரான உமாபதி சிவாச்சாரியார் என்னும் அந்தனருக்கு கிடைத்தது. சந்தானகுரவர் நால்வர் அவர்கள் முறையே மெண்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதிசிவாச்சாரியார் அல்லது கொற்றவன்குடி முதலியார் ஆவர்.

தினமும் உச்சிக்காலப் பூசை பகல் 12.00 மணிக்கு முடித்துக் கொண்டு உமாபதி சிவாச்சாரியார் தனது உதவியாட்களுடன் கடும் வெயிலில் தம் வீடு நோக்கி செல்வார். ஒருநாள் பகற் பூசை கான வந்த நாட்டு மன்னன் திரியம்பகச் சோழன் இதைக் கண்டான். கருணையுள்ள இந்த மன்னன் அன்று தொட்டு உமாபதி சிவாச்சாரியார் கானலில் தவியாது வீடு செல்ல சிவிகை தீவர்த்தி முதலான விருதுகளைக் கொடுத்து வீட்டுக்குப் போகப் பணித்தருளினார். அன்று தொடக்கம் இவ்வைபவம் தினமும் நடந்து வந்தது. சிவபக்தியிலும் குருபக்தியிலும் அடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினார். உமாபதி சிவாச்சாரியார் இவர் மறைஞான சம்பந்த சிவாச்சாரியாரின் சீடராவார்.

உமாபதி சிவாச்சாரியாருக்கு இந்நாட்டு மன்னனான திரியம்பகச் சோழன் இவ்வரிசைகளை அவருக்கு கொடுத்ததைக் கண்ணுற்ற பெண்ணாடகம் மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் ஒருநாள் உமாபதி பூசைக்கு பல்லக்கில் செல்லும் போது போகும் வழியில் மறைஞான சம்பந்தர் சில சீடருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். சங்கு ஒலி கேட்ட உமாபதி வரும் காட்சியை மறைஞான சம்பந்தரது சீடர்கள் பார்க்க மறைஞான சம்பந்தருக்கு கோபம் வந்ததும் "பட்ட கட்டையிற் பகற்குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறிப்பாக சிலேடையாகக் கூறினார். இதன் கருத்து இறந்துபட்ட மரத்தினால் செய்யப்பட்டது சிவிகை அதைக்காவும் கொம்புத்தண்டும் அதே இறந்தபட்ட மரத்தினால் செய்யப்பட்டது. பட்டப் பகலில் யாரும் தீவர்த்தி கொழுத்திக் கொண்டு போவார்களா? அப்படிச் செல்பவன் குருடனல்லாது வேறு யார்? உடனே உமாபதி சிவாச்சாரியார் பல்லக்கை விட்டிறங்கி வந்து மறைஞானசம்பந்தரது பாதத்தில் வீழ்ந்து வணங்கி அவரை குருவாக ஏற்றார்.

# உமாபதி சிவாச்சாரியார் ஓர் மகாமூடன் ஆடம்பரப் பிரியன் என எண்ணி தனது சீடனுக்கு ஞானம் பிறக்குமாறு இவர் இதைச் சொன்னார்

இதனைக் கேட்ட உமாபதி சிவாச்சாரியார் அதன் ஆழமான ஞானக் கருத்தை விளங்கினார். அதாவது ஆன்மா உடலை விட்டுப் பிரிந்த பின்னர் அவ்வுடலை விறகுக் கட்டையில் வைத்து தான் தீ மூட்டுவார்கள். இதை விளங்காது நானும் விறகுக் கட்டையில் ஏறிச் செல்கிறேன் ஆகையால் நான் உண்மையாய் குருடனாகி விட்டேன் எனக்கேன் இந்த ஆடம்பரம் என்று நினைத்தார்.

ஞானசம்பந்தர் அவருடைய குரு அவருடைய அதி தீவிர பக்குவத்தை உலகினர்க்கு வெளிப்படுத்துவான் வேண்டி தமது சிவிகையை விட்டிறங்கி மறைஞான சம்பந்தரை அஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்கும் பொருட்டு சென்றார். தான் சொன்னதை ஏளனமாகக் கருதி தன்னை ஏதோ ஊறு செய்திட உமாபதி வருகிறான் என்று எண்ணிய ஞானசம்பந்தர் ஓடத் தொடங்கினார். உமாபதியும் அவர் பின்னே ஓடினார் ஒருவரை ஒருவர் துரத்திக்கொண்டே சென்றார்கள். பிரமாவும் விஷ்ணுவும் சிவபெருமானைத் தேடிக்களைத்தது போல இவர்கள் இருவரும் வெகுவாகக் களைத்துவிட்டார்கள்.

**"பாரகம் புகலும் நல்லைப் பண்புடைத் தொழிலெண்றெண்ணி**
**காருகம் வினைமேற் கொண்ட கரிசலார் வீதி சென்று**
**சீரகம் புகுநூல் பாவில் செலுத்திய கூழின் சேடம்**
**தாருமிவ் விடத்தாமென்று கரத்தினில் வாங்கியுண்டார்"**

**பொழிப்பு :** உலகமே நல்ல பண்புள்ள தொழிலென்று புகழ் நெசவுத் தொழிலையே தாம் கொண்டவர்களாக்கிய கைக்கோளர் செங்குந்தர் தெருவுக்குச் சென்று நல்ல நூலினால் செய்த பாவிற்கு போட்ட கஞ்சிக் கூழின் மிச்சம் இருந்தால் தாருங்கள் என்று கேட்டு இரண்டு கைகளையும் நீட்டி கையாலே குடித்தார்.

பாவோடிக் கொண்டிருந்த செங்குந்தர் வீதியை மறைஞான சம்பந்தர் நண்ணிவிட்டார் தாகம் தாங்க முடியா நிலையில் அங்கு நின்ற செங்குந்தர்களை தாக சாந்திக்கு ஏதும் தரச் சொன்னார். செங்குந்தர்கள் பாத்தோயும் கஞ்சிக் கூழைவிட வேறு ஒன்றும் இல்லை என்றார்கள். பரவாயில்லை அதையாகினும் தாருங்கள் என்றார். செங்குந்தர்கள் பாத்தோயும் கஞ்சிக் கூழை சட்டியால் அள்ளி வார்க்க அதை ஞானசம்பந்தராகிய பிராமணர் இரு கைகளையும் நீட்டி மண்டைக்

கையில் குடித்தார். குருபக்தி கொண்ட உமாபதி சிவாச்சாரியாராகிய பிராமணர் சம்பந்தரின் கைகளால் நிறைந்து வழிந்து அவருடைய முழங்கைகளினால் ஊற்றுண்ட கூழை தமதிரு கைகளானும் ஏந்திக் குடித்தார்.

இச் செயற்கருஞ் செய்கையை அறிந்த மற்றைய தில்லைவாழ் அந்தணர்கள் உமாபதியின் செய்கையை நன்குணராது அவரைப் பழித்தனர். அரசனுக்கும் முறையிட்டனர். நடேசப் பெருமானுக்கு பூசை செய்யலாயக் கற்றவர் என்றும் முறையிட்டனர். இதைக் கேட்டவுடன் திரியம்பகச் சோழன் உமாபதி சிவாச்சாரியாரை அன்று முதல் சிதம்பரம் நடராசப் பெருமானுக்கு பூசை செய்வதிலிருந்தும் நிறுத்தி வைத்தான். மன்னனால் அவமானப்படுத்தப்பட்ட உமாபதியார் செங்குந்தர் வாழும் கொற்றவன் குடியில் சென்று அஞ்ஞாத வாசம் செய்தார். நடராசரிடம் முறையிட்டுக் கொண்டு அவரே தஞ்சமென்று வாழ்ந்து வந்தார். இதனால் அவருக்கு " கொற்றவன் குடி முதலி" என்ற பெயர் வந்தது. அவருடைய சமாதி கொற்றவன் குடியில் தான் அமைக்கப்பட்டிருக்கின்றது.

மார்கழி மாதம் சிதம்பரத்தில் உற்சவ காலம் கிட்டியது. தில்லைாழ் அந்தணரால் கொடுக்கப்பட்ட கொடிச்சீலை அரைக்கம்பத்தில் ஏறி அறுந்து விழுந்தது. பலமுறை ஏற்றியும் பலனில்லாது போனது. அரைக்கம்பத்தில் ஏறி அறுந்ததினால் போலும் இன்றும் பெரியோர் மறைந்தால் எங்கும் அரைக்கம்பத்தில் கொடி பறக்க விடுகிறார்கள். ஏதோ மூர்த்தி காரியம் பிழைத்து விட்டதென்று அஞ்சி அரசனும் தில்லை வாழ் அந்தணரும் நடராஜப் பெருமானிடம் பணிந்து தம் பிழைகளைப் பொறுக்குமாறு விண்ணப்பித்தார்கள் உடனே அசரீரி வாக்கு **"உமாபதி சிவாச்சாரியார் பூசகராகி அவர் பருகிய கூழைக் கொடுத்த செங்குந்தர் நெசவு செய்து அவர்களால் கொடுக்கும் கொடிச்சீலையே நமக்குப் பிரீதி"** என்று கூறிற்று.

இதைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர்களும் அரசனும் ஏங்கி தங்கள் பிழைகளைப் பொறுக்கும் படி மன்னிப்புக்கேட்டு கொற்றவன் குடிக்குச் சென்று உமாபதி சிவாச்சாரியாரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரைப் பூசகராக ஏற்கும் படி அரசன் வேண்டிக் கொண்டான்.

**மதுரைப் பூராணப் பாட்டு**

**கோக்களை மின்னாரை குலத்தினில் தவத்தின் வேத**
**மாக்களைச் சிசுவைக் கொன்றான் செய்யநாள் நியமம் தன்னை ஆசான்**
**ஆக்கமதா பித்தான் பாவம் அனைத்தும் செங்குந்தர் வீதி**
**தேக்கிடப் பிச்சைவாங்கி உண்டிடத் தீருமன்றே.**

**பொழிப்பு :** செங்குந்தர் வீதியில் செங்குந்தரிடம் பிச்சைவாங்கி சாப்பிட்டால் சகல பாவங்களும் தீரும்.

மேற்படி பாட்டிற்கிணங்க திரியம்பகச் சோழமன்னன் உமாபதியை வேண்ட அவரை பல விருதுகளுடன் கொற்றவன் குடியிலிருந்து அழைத்து வந்து செங்குந்தர் வீதிக்கு குடை, கொடி, ஆலவட்டம் வாத்தியங்கள் அனுப்பி அவர்களால் நெசவு செய்யப்பட்ட கொடிச்சீலையை கொண்டு வந்து கொடுக்கும் படி வேண்டிக் கொண்டான். அதற்கிணங்க செங்குந்தர் தில்லைச் சிதம்பரத்திற்கு கொடிச்சீலை கொடுத்தனர். இன்றும் கொடுத்து வருகின்றனர்.

உமாபதி சிவாச்சாரியார் கயிறு கொண்டிழுக்காமல் "கொடிக்கவி" என்னும் பிரபந்தத்தைப் பாட செங்குந்தர் கொடுத்த கொடி வழுவில்லாமல் தானாகவே ஏறிற்று சகல கோயில்களிற்கும் அன்று தொட்டு செங்குந்தரே கொடிச்சீலை கொடுத்து வந்தனர். அவர்கள் இல்லாத ஊர்களில் அவர்களால் தெரிவு செய்யப் பட்ட கொடிச்சீலையே ஏற்றப்பட்டன.

இலங்கையிலுள்ள பல கோவில்களில் இவர்களாலேயே கொடிச்சீலை கொடுக்கப்பட்டு வந்தது. உதாரணமாக வல்லிபுரக் கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில், வயல்வெளி கந்தசுவாமி கோவில், ஒட்டுசுட்டான் சிவன்கோவில், யாக்கரைப் பிள்ளையார் கோவில், மட்டக்களப்பில் ஆனைப்பந்தி பிள்ளையார் கோவில், நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில், பருத்தித்துறை பசுபதீஸ்வரர் கோவில், கரவெட்டி நுணாவில் பிள்ளையார் கோவில், மாமாங்கேஸ்வரர் கோவில் குறிப்பிடத்தக்கன. இவற்றில் யாக்கரைப் பிள்ளையார் கோவில் என்பன செங்குந்தரின் சொந்தக் கோவில் என்பது குறிப்பிடத்தக்கது.

**மரபு**

இம் மரபினரின் உற்பத்தி முதன் முதலாக ஈட்டி எழுபது என்னும் பிரபந்தில் தான் வருகின்றது. இப்பிரபந்தம் அம்மரபினராக விச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டது. செங்குந்தர் என்னும் சொல்குந்தத்திற்கு உரியவர் என்று பொருள்படும் குந்தம் என்னும் ஈட்டி எனினும் ஒன்றே முதற் கண்எழுந்த ஈட்டியெழுபது என்னும் நூல் இம்மரபினர்க்கு செங்குந்தர் என்னும் பெயர் உண்டாயினதற்கு உண்டான உண்மையை விளக்கிக் கூறுகின்றது அன்றியும் இம் மரபினருக்கு கைக்கோளர் என்று பெயர் ஏற்பட்டதற்கு இதுவே காரணம் என்று சிலர் கருதுகின்றனர். ஆயினும் அச்சொல் கைத்தோழர் என்றிருந்து பிறகு கைக்கோளர் என்ற மாறிற்று என்பர். "எய்தவர்க்குச் சிறைச் சோறு மீகுவார் கைக்கோளராகிய செங்குந்தரே" என்னும் அடி இரண்டு பெயரும் ஒன்றென்பதைக்

காட்டும். "நிதம் அந்திசந்தி சிவசிந்தனை மறவாதவரா வரிச் செங்குந்தரே" என்னும் அடி செங்குந்தர் சிறந்த சீலமுடையவர் என்பதைக் காட்டுவதால் கை = ஒழுக்கத்தை, கோளர் = கொண்டவர் என்று கூறப்படும் பொருளும் ஒருவாறு பொருந்துமாறு காண்க. "குருபூசை, சிவபூசை மறவாத தயவாளர் கொட்டியருள் சப்பாணியே" என்பதையும் தேவே விலகினும் நாவிலகாதவர் செங்குந்தரே என்பதையும் காண்க.

**"செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்**
**தத்துவாயர், காருகர், கைக்கோளர்"**

எனச் சிறப்பித்து சேந்தன் திவாகரராற் கூறப்பட்டுள்ள செங்குத்தப் படையர், சேனைத் தலைவர், தத்துவாயர் காருகர், கைக்கோளர் என்கின்ற ஐந்து பெயர்களும் கைக்கோளரையே குறிக்கின்றன என்று எமக்கு நன்றாகப் புலப்படுகின்றன.

**ஈட்டி எழுபதில் வரும் 4ம் பாட்டு**

**பாதநூ புரத்திற் றேவி சாயைகண் டமலன் கொண்ட**
**காதலாற் கருப்பமாகுங் கதிர்நவ மணிமா தர்கண்**
**மேதகு வீரத்தோடு மென்மீசை யோடும் வந்த**
**மாதவ வீர வாகுத்தலைவரித் தலைவர் மாதோ**

**இதன் பொருள் :** உமாதேவியாரின் பாதர் சிலம்பில் உதிர்ந்த நவமணிகளில் அப்பார்ப்பதியார் திருவுருவத்தைக் கண்ணுற்றுச் சிவபெருமான் கொண்டருளிய இச்சையால் கருவுற்ற ஒளியுடைய நவரத்தினப் பெயர் கொண்ட மகளிர்களிடத்தில் அதிமேம்பாட மைந்த வீரத்தன்மையுடனும் மிருதுவாகிய மீசையுடனும் உதித்த பெரிய தவத்தையுடைய வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களின் மரபினர் இச்செங்குந்தத் தலைவர்கள்.

இனி இவர்கள் தோற்ற விபரத்தை கந்தபுராண பாயிரப் படலத்தை பாருங்கள் 57ம் பாட்டுத் தொடக்கம் 80ம் பாட்டு மட்டும் கூறப்பட்டிருக்கிறது. இதில் 65ம் பாட்டில்

**அந்தமில் விளையாட்டுள்ள அறுமுகக் கடவு டன்னைத்**
**தந்திடு மெல்லை யன்னோன் தானையந் தலைவராக**
**முந்திய விறல்சேர் மொய்ம்பன் முதலிய விலக்கத்தொன்பான்**
**நந்திதன் கணத்தினோரை நம்கைபா லுதிப்பச் செய்தான்.**

**இதன் பொருள் :** எல்லையற்ற திருவிளையாட்டைப் புரிந்தருகின்ற ஆறுமுகக் கடவுள் தன்னைத் தந்திட்ட நேரத்தில் அவருடைய சேனைத் தலைவராக மிகவும் மேலான வலிமையுடைய வீரவாகு தேவர் முதலிய இலக்கத்தொன்பது நந்தி கணத்தவர் எனப்படும் வீரர்களை எம்பிராட்டிபால் தோன்றி ஒன்பது சக்திகளிட மிருந்தும் சிவபிரான் தோற்றுவித்தருளினார்.

கந்தபுராண துணைவர் வருபடலத்திலும் 1ம் பாடல் தொடக்கம் 37ம் பாடல் வரை இம் மரபினின் தோற்ற வரலாற்றைக் காணலாம்.

**நஞ்ச யின்றவன் நெற்றிநாட் டத்தினால் நல்கும்**
**வெஞ்சி டர்ப்பொறி வெம்மையை ஆற்றவள் விமலை**
**செஞ்சி லம்படி தாக்கலின் நவமணி சிதற**
**அஞ்சியோடினள் இத்திற முணர்ந்தனள் அகத்துள்**

**இதன் பொருள் :** நஞ்சினை உண்டு கண்டத்திலே தரித்து வைத்த வரும் நெற்றியில் கண் உடையவருமான சிவபிரான் தனது நெற்றிக்கண்ணினின் றும் தோற்றுவித்த ஆறு வெப்பமான சுடர்ப் பொறிகளும் வருதலும். அவற்றின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் உமையம்மை சிவபிரான் பாகமாக அமர்ந்து இருத்தலையே விடுத்து பயத்துடன் அப்பால் தனது சிவந்தமிருதுவான பாதங்களில் அணிந்த சிலம்புகள் வேகமாக ஓடுதலினாலே ஒன்றுடன் ஒன்று தாக் குண்டு அவற்றுள் இருந்த நவரத்தினங்கள் சிதறிப் போகும்படி ஓடினாள். ஓடிச் சென்றவள் இத்திறம் தனதுள்ளத்து உணர்ந்தாள்.

**7ம் பாட்டு**

**தளிரின் மெல்லடிப் பரிபுர மாயின தணந்து**
**மிளிருக் மற்றவ மணிகளின் ஆணையால் விமலை**
**ஒளிரு நல்லுருத் தோன்றிய ஐம்முகத் தொருவன்**
**தெளிரு முச்சுடர் அகத்திடை யமர்ந்திடும் செயல்போல்**

**இதன் பொருள் :** தளிர் போலும் மிருதுவான செவ்விய திருவடியினில் அணிந்த சிலம்புகளில் நின்றும் சிதறுண்டு வீழ்ந்து மிளிருகின்ற அந்த ஒன்பது இரத்தினங்களில், எல்லாவற்றையும் ஆக்குகின்ற ஆணையின் படி, நிர்மல சொரூபியான அம்பாளின் அழகிய பிரகாசமுடைய உருவங்கள் தோன்றின. அது எதுபோலும் எனில்

ஐந்த திருமுகங்களை உடைய சிவபிரான், அக்கினி, சந்திரன், சூரியன் எனும் மூன்று சுடர்களின் அகத்தே பொருத்தி இருத்தல் போல.

**8ம் பாட்டு**

**எண்ணி லாநவ மணிகளின் உடையுரு வெனைத்துங்**
**கண்ணி னாற்றெரிந் தருளினால் வம்மெனக் கமற**
**அண்ண வோர்வகை மணிக்கொரு சக்திக ளாக**
**நண்ணின னார்நவ சத்திகள் அமரர் நற் றவத்தால்**

**இதன் பொருள் :** எண்ணில்லாத அழகுடைய ஒன்பது இரத்தினங்களில் உமையம்மையாரின் உருத்தெரிதலும் அதனை சிவபிரான் தனது கண்ணினால் நோக்கி அருள் நீர்மையால் "இங்கு வாருங்கள்" என அவ்வுருவங்களை கூப்பிட்ட போது அழகான ஒன்பது வகையான இரத்தினங்களில் நின்றும் ஒவ்வொரு இரத்தினத்திற்கு ஒரு சக்தியாக ஒன்பது சக்திகள் தோன்றினார்கள் தேவர்கள் செய்த நல்ல தவப்பேறினர்.

**9ம் பாட்டு**

**பருப்ப தக்கொடி புரைநவ சக்திகள் பரமன்**
**திருப்ப தைத்திடை வணங்கிநின் றவனிடைச் சிந்தை**
**விருப்பம்வைத்தலும் முனிவர்தம் மகளிற்போல் விரைவில்**
**கருப்பமுற்றனர் யாவரும் உமையவள் கண்டாள்.**

**இதன் பொருள் :** இமயமலையில் திருவவதாரம் செய்த பூங்கொடி போனும் அழகுடைய பார்வதியம்மையாரை ஒத்து இப்போது தோன்றிய ஒன்பது சக்திகளும் சிவபெருமானுடைய திருப்பாதத்தை தாழ்ந்து வணங்கி நின்று அவரிடத்து விருப்பம் வைத்தலும் உடனே அவர்கள் முனிவர் பத்தினிகளானவர் எவ்வாறு கணவன் மாருடன் உடலுறவு இன்றி பார்வையால் கருள்கொள்வரோ அதேபோல இந்த ஒன்பது சக்திகளும் கர்ப்பம் கொள்ளனும் இவை யாவற்றையும் உமையம்மை யார் கண்டார்.

முருகப் பெருமானின் சகோதரர்களாகியும் படைவீரர்களாகியும் உடைய நவவீரருடைய வம்சாவழியினராகிய செங்குந்தர்கள் பாவமற்ற தொழிலெனக் கருதி திருவள்ளுவர் போல நெசவுத்தொழிலையே கைக்கொண்டார்கள். காலம்

செல்லச் செல்ல அவர்களுடைய பொருளாதாரம் இறக்குமதிப் புடவைகளால் பாதிக்கப்பட்டமையால் அவர்கள் நெசவுத் தொழிலைக் கைவிட்டு வேறு தொழில் களில் ஈடுபடத் தொடங்கி விட்டார்கள். எனினும் இன்னும் சிலசில குடும்பங்கள் தங்கள் குலத்தொழிலை விடாது கஷ்ட நிலையிலும் நடாத்திக் கொண்டுதானிருக்கி றார்கள். அவர்கள் வழிவந்த கைக்கோளர் அல்லது செங்குந்தர்களே இன்றும் நல்லையம்பதியில் கொடிச்சீலை கொடுத்து வருகிறார்கள். கொடிச்சீலை தினத்தன்று நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து மேளவாத்தியம் முதலியன செங்குந்தர் வீதிக்கு கொடிச்சீலை கொண்டுவர அனுப்பப்படுகின்றது.

எந்தக் கோவில்களுக்கும் கொடிச்சீலை மிகவும் புனிதமாகவும் தாம்பாளத்தில் வைத்து உபயகாரரால் தலையில் சுமந்து கொண்டு மங்கள வாத்தியம் முழங்க கோவிலைச் சென்றடையும். ஆனால் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு கொடுக்கும் கொடிச்சீலை இப்படி சர்வசாதாரணமாக கொண்டு செல்லப்படுவதில்லை இக் கொடிச்சீலையைக் கொடுக்கும் செங்குந்த மரபினர் தங்களுக்கியன்ற பொருளுதவி கொடுத்துச் செய்யப்பட்ட ஒரு சிறு தேரில் ஏற்றிக் கொடியேற்றும் நாளுக்கு முதல் நாள் காலையே மங்கள வாத்தியத்துடன் கோவில் முன்றலை இத் தேர் வந்தடையும் தேரிலிருந்து கொடிச்சீலையை உபயகாரராகிய செங்குந்தப் பெருமகன் தலையில் சுமந்து சென்று கோவில் பிரதம குருக்களிடம் கையளிப்பர். அடுத்த நாட்காலையே கொடியேற்ற வைபவம் நடைபெறும். உபயகாரர் அன்று சமூகமளிப்பார். இச்சிறிய தேர் கொன்றலடி வைரவர் கோவிலுக் கண்மித்திருக்கும் வேல் மடம் முருகன் ஆலயத்திலிருந்தே வருடாவருடம் புறப்படும்.

**செங்குந்தர் வாழும் இடங்கள்**

கல்வியங்காடு, கரவெட்டி. முள்ளியவளை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, இந்தியாவிலும் இருக்கிறார்கள் அவர்களை செங்குந்த முதலியார் என அழைப்பர்.

இந்தியாவிலிருந்து பருத்தி நூல் இறக்கிய படியால் பருத்தித்துறை எனப்பட்டது. செங்குந்த மக்களுக்காகவே பருத்தி நூல் இறக்கப்பட்டது. கற்கோவளம் என்ற இடத்தில் இந்தியாவிலிருந்து கைக்கோளர் வந்து குடியேறினர். இதனால் இந்த இடம் கற்கோவளம் எனப்பட்டது. இந்தியாவிலிருந்து ஏழுவத்தை களில் (தோணிகளில்) வந்தவர்களைக் குடியேற்றிய இடமே திருநெல்வேலியிலுள்ள எழுவத்தை என்ற இடமாகும். இந்தியாவிலிருந்து வள்ளத்தில் கற்கள் பருத்தித் துறை இறங்கு துறைக்கு கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து செங்குந்த மக்கள் தொடர்ச்சியாக நின்று கைகளால் கற்களை மாறி மாறிக் கடத்தியே கரவெட்டி கிழக்கிலுள்ள யார்க்கரு விநாயகர் ஆலயம் செங்குந்த மக்களால் கட்டப்பட்டது.

செங்குந்த முதலி பரம்பரையினது

கோத்திரம் - "நந்திகோத்திரம்"

